**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் :254/மா/2023**

**நாள் : 27/09/2023**

திரு.V.P.ரவிச்சந்திரன்,
திருப்பூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர் – எதிர்மனுதாரர்

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P.ரவிச்சந்திரன் என்பவரின் 17.08.2023 நாளிட்ட மனு 30.08.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 254/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P.ரவிச்சந்திரன் என்பவர் தனது 17.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

" 2023 திருப்பூர் மாநகராட்சி சட்டங்கள் திருப்பூரை திட்டமிடப்பட்ட நகரமாக உருவாக்குவதற்காக உள்ளது. திருப்பூர் மாநகராட்சி அதிகாரிகள் சரியாக செயல்படாத காரணத்தால் போக்குவரத்து நெரிசலும், மாசுபட்ட நகரமாகவும் உருவாகி கொண்டுள்ளது. மாநில நெடுஞ்சாலையும் ஊத்துக்குளி சாலையும் மாநகராட்சி யூனியன் மில் சாலையும் இணையும் மூன்று முனை சந்திப்பில் ஒரு வணிக வளாகம் கட்டப்பட்டு வருகிறது. இந்த வணிக வளாக கட்டுமானத்திற்கு எந்த விதமான அனுமதியும் பெறாமல் நடந்து கொண்டுள்ளது. 28.06.2023 அன்று zone3.tcmc@gmail.com மின்னஞ்சல் மூலமாக கட்டிடப்பணியின் ஆரம்ப நிலையிலேயே மாநகராட்சி மண்டலம் மூன்றின் உதவி ஆணையாளர் அவர்களுக்கு புகைப்படத்துடன் புகார் தெரிவித்தேன். உதவி ஆணையாளர் அவர்கள் இன்று வரை எந்தவித

நடவடிக்கையும் எடுக்காமல் விதிமுறைகளை மீறி சாலைகளின் போக்குவரத்துக்கு இடையூறாக கட்டப்படும் வணிக வளாகத்தின் கட்டுமானப்பணிக்கு உதவி கொண்டு உள்ளார்கள். திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் ஒன்றில் 5092 கட்டிடங்கள் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளன.

மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள மூன்று முனை சந்திப்பில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தின் கட்டுமானத்தை நிறுத்தவும், மாநகராட்சியில் கட்டுமான அனுமதி பெற்று வணிக வளாகம் கட்ட உத்தரவிடுமாறும் புகார் மனு கொடுத்த பின்னும் நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி மண்டல உதவி ஆணையாளர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், திருப்பூர் மாநகராட்சி பகுதியில் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்காமலும் சொத்து வரி விதித்து பயன்பாட்டுக்கு அனுமதி அளிக்காமல் இருக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 05.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.09.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" திருப்பூர் மாநகராட்சியில் மாநில நெடுஞ்சாலையும், ஊத்துக்குளி சாலையும் மற்றும் மாநகராட்சி யூனியன் மில் சாலையும் இணையும் மூன்று முனை சந்திப்பில் வணிக வளாகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இவ்வணிக வளாக கட்டுமானத்திற்கான எவ்வித அனுமதியும் மாநகராட்சியில் பெறாமல் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டுமானப்பணி குறித்து மாநகராட்சியில் பலமுறை புகார் மனுக்கள் அளித்தும் மேற்கண்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போக்குவரத்திற்கு இடையூறாக கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டத்தின் கட்டுமானப்பணியை நிறுத்த மாநகராட்சியால் நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5. திருப்பூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடமானது திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.192 பிளாக் எண் 192 நகரளவு எண்கள் 2, 3/2 கதவு எண் 331(2) (3) / 149–150ல் சுமார் 2000 சதுர அடி பரப்பளவில் இருந்த ஓட்டுக்கூரை கட்டடம் இடிக்கப்பட்டு, புதிதாக தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டத்திற்கு கட்டட அனுமதி எண் 032/BL/2023/00081 நாள் 14.01.2023ன்படி 946 சதுர அடி பரப்பளவில் வணிக உபயோக கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56ன்படியும் 02.08.2023 அன்று அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது என்றும் இதனைத்தொடர்ந்து அக்கட்டடத்தை பூட்டி சீலிட (Lock and Seal) இரண்டு வாரகாலத்தில் கட்டட

உரிமையாளருக்கு தாக்கீது அனுப்பப்படும் எனவும், அதனைத்தொடர்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து இந்நேர்வு தொடர்பான நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் 12.09.2023 நாளிட்ட கடிதம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாதுரையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 12.09.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள இடமானது திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண்.34 வருவாய் நகரளவு ஆவணங்களின்படி, சர்வே வார்டு எண்.ஜிபிளாக் எண்.192, நகரளவு எண்கள் 2, 3/2, கதவு எண்.331(2) (3) / 149–150ல் சுமார் 222.96 ச.மீ. பரப்பளவு உள்ள இடமாகும். இதன் உரிமையாளர் நகரளவு ஆவணங்களின்படி, திரு என்.திருமூர்த்தி, த/பெ.நடராஜன் (நகரளவு ஆவண நகல், நகர் சார் ஆய்வாளர் ஒப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). மேலும் மேற்படி இடத்தில் ஏற்கனவே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருந்த ஓட்டுக்கூரைக்கட்டிடம் 2000 சதுரடி பரப்பளவில் இருந்து வந்தது. தற்போது அக்கட்டிடத்தினை உரிமையாளரால் இடித்து புதியதாக தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டுமானத்திற்கு மாநகராட்சிக்கு முறையாக விண்ணப்ப எண்.க.வி.எண்.032/CP/22–23/0100015 விண்ணப்பத்தின் பேரில் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு விதிமுறைகளுக்குட்பட்டு அமைந்ததன் பேரில் கட்டிட அனுமதி எண்.032/BL/2023/00081 நாள் 14.01.2023ல் உத்தேச கட்டுமானத்திற்கு தரைத்தளம் மற்றும் முதல் தளங்களில் முறையே 964.77 சதுரடி பரப்பளவில் வணிக உபயோக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியால் பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1981ம் வருட கோவை (திருப்பூர்) மாநகராட்சி சட்டத்தின் கீழ் 282 (1) & (2), 296 (1) & (2) பிரிவுகளின்படி, கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2000 பிரிவு 282 (1) (2) மற்றும் 447 நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56ன்படியும் அறிவிப்புகள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரங்கள் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதார ஆவணங்களாக கட்டிட அனுமதி வழங்கப்பட்ட வரைவு செயல்முறை நகல், அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல், மேற்காண் பத்திகளின் வழியாக சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களுக்கான சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளின் நகல்கள் ஆகியவையும், சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர் தனது மனுவில் அனுமதி பெறாமல் மற்றும் அனுமதி பெறப்பட்டதற்கு மாறாக வணிக பயன்பாட்டு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் நிலையில், நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின்படி, பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படுகின்ற நேர்வில் மாநகராட்சியால் அனுமதியற்ற மற்றும் பெறப்படுகின்ற கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டங்கள் கட்டப்படுகின்றதற்காக நகரமைப்பு விதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு

குந்தகமின்றி மாநகராட்சியின் நிதியிழப்புக்கு பாதகமின்றி நடவடிக்கைகள் மேற்கொண்டு சொத்துவரி விதிப்பது நடைமுறையில் உள்ளது" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாநகராட்சியில் மாநில நெடுஞ்சாலையும், ஊத்துக்குளி சாலையும் மற்றும் மாநகராட்சி யூனியன் மில் சாலையும் இணையும் மூன்று முனை சந்திப்பில் வணிக வளாகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இவ்வணிக வளாக கட்டுமானத்திற்கான எவ்வித அனுமதியும் மாநகராட்சியில் பெறாமல் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டுமானப்பணி குறித்து மாநகராட்சியில் பலமுறை புகார் மனுக்கள் அளித்தும் மேற்கண்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போக்குவரத்திற்கு இடையூறாக கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டடத்தின் கட்டுமானப்பணியை நிறுத்த மாநகராட்சியால் நடவடிக்கை எடுத்திட கோரியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண்.34 வருவாய் நகரளவு ஆவணங்களின்படி, சர்வே வார்டு எண்.ஜிபிளாக் எண்.192, நகரளவு எண்கள் 2, 3/2, கதவு எண்.331(2) (3) / 149–150ல் சுமார் 222.96 ச.மீ. பரப்பளவு உள்ள இடமாகும். இதன் உரிமையாளர் நகரளவு ஆவணங்களின்படி, திரு என்.திருமூர்த்தி என்பவராவார். மேற்படி இடத்தில் ஏற்கனவே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருந்த ஓட்டுக்கூரைக்கட்டிடம் 2000 சதுரடி பரப்பளவில் இருந்து வந்தது. தற்போது அக்கட்டிடத்தினை உரிமையாளரால் இடித்து புதியதாக தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டுமானத்திற்கு மாநகராட்சிக்கு முறையாக விண்ணப்ப எண்.க.வி.032/CP/22–23/0100015 விண்ணப்பத்தின் பேரில் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு விதிமுறைகளுக்குட்பட்டு அமைந்ததன் பேரில் கட்டிட அனுமதி எண்.032/BL/2023/00081 நாள் 14.01.2023ல் உத்தேச கட்டுமானத்திற்கு தரைத்தளம் மற்றும் முதல் தளங்களில் முறையே 964.77 சதுரடி பரப்பளவில் வணிக உபயோக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியால் பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1981ம் வருட கோவை (திருப்பூர்) மாநகராட்சி சட்டத்தின் கீழ் 282 (1) & (2), 296 (1) & (2) பிரிவுகளின்படி, கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 282 (1) (2) மற்றும் 447 நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56ன்படியும் அறிவிப்புகள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும் குறிப்பாக:-

பிரிவு '7' The Ombudsman shall perform all or any of the functions, namely"-

7 ( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(c ) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

1. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டம் 1971–ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சட்டப்பிரிவுகளின்படி நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2. ஆரம்ப நிலையிலேயே கட்டுமான விதிமீறல்கள் கண்டறியப்பட்டு இதுபோன்ற புகார்கள் வருவதை தவிர்த்திருக்கலாம்.

3. தங்கள் பகுதிகளில் கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களுக்கு சென்று தொடர்ச்சியாக ஆய்வு செய்து கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும் அனுமதிப்படி கட்டுமானம் நடைபெறுகிறதா எனவும் கள அலுவலர்கள் கண்காணித்து விதிமீறல்கள் இருந்தால் அது உடனுக்குடன் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. மாநகராட்சி அலுவலர்கள் முன் முயற்சிகள் எடுத்து செயல்பட்டிருப்பின் அது மாநகராட்சி அலுவலர்களின் முன்னெடுப்பு (pro active) நடவடிக்கையாகவும் திருப்பூர் மாநகராட்சியின் பெருமைக்கு வலுசேர்க்கும் என்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V.P.ரவிச்சந்திரன்,
4–C. ஆகாஷ் இல்லம்,
பாளையக்காடு,
திருப்பூர் – 641 601.

2. ஆணையர்,
   திருப்பூர் மாநகராட்சி,
   திருப்பூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

4. இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்